International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 06 Issue: 01 January to March 2024 www.irjtsjournal.org

பிரதேச அபிவிருத்தியில் இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் வகிபாகம் - ஒரு கோட்பாட்டுப் பகுப்பாய்வு

பேராசிரியர் வேலுப்பிள்ளை குணரத்தினம்
அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர்
சமூக விஞ்ஞானங்கள் துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

ஆய்வுச்சுருக்கம்

இலங்கையில் பிரதேச அபிவிருத்திச் செயற்பாடுகளில் உள்ளூராட்சி நிறுவனங்களின் வகிபாகம் மிகவும் உயர்வனதாகும். இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் தோற்றுவாய் நீண்ட வரலாற்று ஓட்டத்தைக் கொண்டது. இலங்கையில் மன்னர்களின் நிர்வாகத்தில் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உள்ளூராட்சி முறை வழக்கத்தில் இருந்ததாக மகாவம்சத்திலும் , பண்டைய நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆயினும் சனநாயக ரீதியில் அமைந்த உள்ளூராட்சி அமைப்புக்கு 1920ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டமே உந்துசக்தியாக அமைந்தது. ஆகவே , ஆசியாவிலே முதன்முதலாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நகரசபை நிறுவப்பட்டது இலங்கையிலேயேயாகும். அதுமட்டுமன்றி , இலங்கையில் முதலாவதாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட நகர முதல்வராக பதவியேற்றவர் டாக்டர் இரத்தினஜோதி சரவணமுத்து என்னும் தமிழர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். உள்ளூராட்சி அரசாங்கம் என்பது மத்தியரசிற்கு உதவியளிப்பதற்காக பாராளுமன்றத்தினால் உருவாக்கப்பட்டு மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட, சுயாட்சி உரிமை உடைய நேரடியானதும் மறைமுகமானதுமான வழிகளில் பலவிதமான சேவைகளை மக்களுக்கு வழங்குகின்ற உள்ளூர் வரிகளினால் பகுதியளவில் நிதியூட்டப்படுகின்ற சபைகளை குறிப்பதாகும் என வரையறுக்கலாம். இந்த ஆய்வுக்கட்டுரையானது இலங்கையில் கட்டமைக்கப்பட்டுள்ள பல்வேறு உள்ளூராட்சி அரசமைப்புக்கள் தொடர்பில் ஆய்வினை மேற்கொண்டு அவற்றின் செயற்பாடுகள் , எதிர்கொள்கின்ற சவால்கள் என்பவற்றினையும் சிறப்பான வகையில் செயற்படுவதற்காக பின்பற்றுகின்ற முறைகளையும் கோட்பாட்டுப் பகுப்பாய்வுக் உள்ளாக்கி வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

திறவுச் சொற்கள்: உள்ளூராட்சி நிறுவனங்கள், பிரதேச அபிவிருத்தி, இலங்கை அரசியல்

அறிமுகம்

பிராந்திய அபிவிருத்தி என்பது ஒரு பரந்த அர்த்தத்தை உள்ளடக்கியதாகும். நகரம் முதல் கிராமங்கள் வரை அனைத்தும் பிராந்திய வகையிலும் நல்வாழ்வு , வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், பிரதேச அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான அரசியல் பொருளாதார பொதுவான முயற்சியாக பிரதேச அபிவிருத்தி காணப்படுகின்றது. இந்த பிரதேச அபிவிருத்தி என்பது தேசிய அரசியல் பொருளாதார விடயங்களுக்கு மிகவும் காத்திரமான பங்களிப்பினை வழங்குகின்றது. இலங்கையில் பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் உள்ளூராட்சி நிறுவனங்களின் வகிபாகம் குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் தோற்றுவாய் நீண்ட வரலாற்று ஓட்டத்தைக் கொண்டது. இலங்கையில்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2024, IRJTSR

மன்னர்களின் நிர்வாகத்தில் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உள்ளூராட்சி முறை வழக்கத்தில் இருந்ததாக மகாவம்சத்திலும் , பண்டைய நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. மன்னராட்சிக் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தில் பஞ்சாய முறையும் , கண்டி இராச்சியத்தில் கம்சபா , ரட்டசபா ஆகிய முறைகளும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. போர்த்துக்கேயரிடம் யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைந்ததையடுத்து யாழ்ப்பாண இராச்சியத்தில் உள்ளூராட்சி முறை முடிவுற்றது. 1818ஆம் ஆண்டு கண்டி கலகத்தைத் தொடர்ந்து பிரித்தானியர் வெளியிட்ட பிரகடனத்தை அடுத்து கண்டி இராட்சியத்தில் உள்ளூராட்சி முறை இல்லாதொழிந்தது. ஆயினும் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தான் இன்றைய உள்ளூராட்சி கட்டமைப்பை நோக்கி முன்னேற்றங்கள் ஏற்படத் தொடங்கின. பிரித்தானியர் ஆட்சியின் போது 1856ஆம் ஆண்டு நீர்ப்பாசனச் சட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இது உள்ளூராட்சி அமைப்புக்கு சட்ட வடிவம் கொடுத்தது. 1865ஆம் ஆண்டு கொழும்புக்கும் , கண்டிக்கும் மாநகரசபைகள் உருவாக்கப்பட்டதுடன் , உள்ளூராட்சியமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையுடன் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும் தோற்றம் கண்டது. ஆயினும் இன்றைய தேர்ந்தெடுக்கப்பட்ட தவிசாளர் முறைமை உருவாக்கப்படவில்லை. மாகாண அதிபரை தலைவராகக் கொண்ட ஓர் அமைப்பாக இருந்தது. கிராம சபைகளை தோற்றுவிப்பதற்கான முயற்சி 1871ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பட்டின , நகரசபைகளை தோற்றுவிப்பதற்கான கால்கோள் 1871ஆம் ஆண்டு 18ம் இலக்க சட்டத்துடன் இடப்பட்டது. அத்துடன் , 1898ஆம் ஆண்டு காலயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இலங்கை கிராமிய பாதுகாப்புச் சங்க கூட்டமொன்றை கூட்டி நூறு வருடங்களுக்கு முன்பிருந்தே காப்பாற்றப்பட்டு வரும் கிராமிய சமுதாய நிர்வாக முறையை அழிக்கக்கூடாது என பிரித்தானியரிடம் கேட்டுக் கொண்டார். ஆயினும் சனநாயக ரீதியில் அமைந்த உள்ளூராட்சி அமைப்புக்கு 1920ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டமே உந்துசக்தியாக அமைந்தது. ஆகவே , ஆசியாவிலே முதன்முதலாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நகரசபை நிறுவப்பட்டது இலங்கையிலேயேயாகும். அதுமட்டுமன்றி, இலங்கையில் முதலாவதாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட நகர முதல்வராக பதவியேற்றவர் டாக்டர் இரத்தினஜோதி சரவணமுத்து என்னும் தமிழர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

உள்ளூராட்சி நிறுவனங்களும், நியதிச் சட்டவாக்கமும்

1938ம் ஆண்டு 60ம் இலக்கக் கிராம சபைக் கட்டளைச் சட்டத்தால் கிராம சபைகள் தோற்றுவிக்கப்பட்டன. 1939ம் ஆண்டு 61ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தால் நகரசபை உருவாக்கப்பட்டது. 1946ஆம் ஆண்டு கட்டளைச் சட்டத்தால் பட்டினசபைகள் உருவாக்கப்பட்டன. 1947ம் ஆண்டு 29ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தால் மாநகர சபைகள் உருவாக்கப்பட்டன. 1980ம் ஆண்டு 35ஆம் இலக்க அபிவிருத்திச் சபைகள் சட்டத்தால் கிராமசபைகள், பட்டினசபைகள் ஒழிக்கப்பட்டு இன்றைய உள்ளூராட்சி அதிகார சபைகளான மாநகர சபை , நகர சபை என்பன நிலைநிறுத்தப்பட்டன. 1987ம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன.

உள்ளூராட்சி நிறுவனங்கள்

அதிகாரப் பன்முகப்படுத்தல் என்ற எண்ணக்கருவினை வரையறை செய்வது கடினமாயினும் அதிகாரம், பொறுப்புக்கள், பணிகள் என்பவற்றினை மத்தியரசாங்கத்திலிருந்து உப அலகுக்கு மாற்றுகின்ற செயன்முறையினை அதிகாரப் பன்முகப்படுத்தல் எனலாம். ரொன்டின்லி என்ற அரசியல் அறிஞரின் கருத்துப்படி 'திட்டமிடுவதற்கும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் பொதுப்பணிகளை முகாமை செய்வதற்குமான சட்ட மற்றும் அரசியல் அதிகாரத்தினை மத்திய அரசாங்கத்திலிருந்து அதன் முகவர்களுக்கு இடமாற்றுவதே

அதிகாரப் பன்முகப்படுத்தலாகும்' என்கின்றார். இத்தகைய அதிகாரப் பன்முகப்படுத்தலானது மூன்று பரிமாணங்களைக் கொண்டுள்ளது என மனோர் (ஆயழெச) என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். அவையாவன:

(i). அரசியல் அதிகாரப் பன்முகப்படுத்தல்

(ii). நிர்வாக அதிகாரப் பன்முகப்படுத்தல்

(iii). நிதி அதிகாரப் பன்முகப்படுத்தல்

அதிகாரப் பன்முகப்படுத்தலுடன் தொடர்புபட்ட ஓர் அம்சமே உள்ளூராட்சி நிறுவனமாகும். அதிகாரப் பன்முகப்படுத்தலின் பல்வேறு பரிமாணங்களின் ஒரு பகுதியே உள்ளூராட்சி நிறுவனமாகும் என சர்மா என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். கோம் என்ற அறிஞர் 'அரசாங்கத்திற்கு உதவியளிக்கும் அதிகார சபைகளினால் ஆளப்படும் அரசாங்கமே உள்ளூராட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் அரச கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதும் சுதந்திரமான தெரிவின் மூலம் தகுதியான பிரதேசவாசிகளைக் கொண்டு அமைக்கப்பட்டதுமாகும்' என்கின்றார். 'மத்திய அரசிற்கும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் இடையேயான சேவைப் பொறுப்புடைமைகள் தொடர்பான சராசரியான சுயாட்சியினைக் கொண்டதே உள்ளூராட்சி அரசாங்கமாகும் ' என மேயர் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். 'அரசியற் செயன்முறைகளின் உள்ளூர் மக்களின் உணர்வு பூர்வமான பங்கேற்புக்கு உதவுவதுடன் ஜனநாயக மயமாக்கத்தின் முக்கியமான அடிப்படையாகவும் தீர்மானம் எடுத்தல் செயன்முறையின் வெகுஜனங்களின் பங்கேற்பினை அதிகரிப்பதற்கு உதவும் கருவியே உள்ளூராட்சி அரசாங்கமாகும் ' என மோகூட் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். 'உள்ளூராட்சி அதிகார சபையானது ஒரு பிரதேசத்தினை வடிவமைப்பதற்கும் அவற்றை பாதுகாப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றை மாற்றியமைப்பதற்கும் ஒரு புதிய அடையாளத்தினை அவற்றிற்கு பெற்றுக்கொடுப்பதற்குமான திறனைக் கொண்டிருக்கின்றது ' என கிளார்க் , ஸ்டிவோட் குறிப்பிடுகின்றனர். ஜனநாயக அரசியல் முறையின் முக்கிய மையமாக உள்ளூராட்சி அரசாங்கங்கள் விளங்குவதுடன் நுட்பம் மிக்க பொறுப்புள்ள குடிகளுக்காக பணி புரிகின்ற ஒரு கருவியாகவும் இவை உள்ளன என ஹேமன்ஸ் , ரூட்மேயர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். மேற்கூறிய விளக்கங்களின் அடிப்படையில் நோக்கும் போது 'உள்ளூராட்சி அரசாங்கம் என்பது மத்தியரசிற்கு உதவியளிப்பதற்காக பாராளுமன்றத்தினால் உருவாக்கப்பட்டு மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட, சுயாட்சி உரிமை உடைய நேரடியானதும் மறைமுகமானதுமான வழிகளில் பலவிதமான சேவைகளை மக்களுக்கு வழங்குகின்ற உள்ளூர் வரிகளினால் பகுதியளவில் நிதியூட்டப்படுகின்ற சபைகளை குறிப்பதாகும் என வரையறுக்கலாம். மாநகர சபை , நகர சபை , பிரதேச சபை கட்டளைச் சட்டங்கள் மூலம் இச்சபைகள் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரால் வர்த்தமானி மூலம் அறிவித்து உருவாக்கப்படலாம். இச்சபைகளின் உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் கீழ் மக்களால் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். விகிதாசார தேர்தல் முறையில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக 2018 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த கலப்புத் தேர்தல் முறை மூலம் சமகால உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இச்சபையின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாகும். தற்பொழுது மாநகர சபைகள் 24, நகர சபைகள் 41, பிரதேச சபைகள் 276 என்பன உள்ளூராட்சி நிர்வாக முறையில் காணப்படுகின்றன.

சபை மாதமொரு முறை கூட்டப்பட வேண்டும். உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி கைச்சாத்திட்டு விண்ணப்பிக்கின்ற போது விசேட கூட்டம் இடம்பெறும். கூட்டம் நடைபெறும் திகதியும் நிகழ்ச்சி நிரல் பற்றியும் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் நான்கு நாட்களுக்கு முன்பு அறிவித்தல் கிடைக்கக்கூடிய வகையில்

© 2024, IRJTSR

ஒழுங்கு செய்யப்பட வேண்டும். நகர சபைத் தலைவர் உறுப்பினர்களுக்கு மூன்று நாட்களுக்கு முன்பு அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும். சிலவேளைகளில் கூட்டத் திகதி ஒத்திவைக்கப்படும் போது 24 மணித்தியாலத்திற்கு முன்பு தெரியப்படுத்தப்பட வேண்டும். தீர்மானச் செயன்முறையின் போது கூட்டத்திற்கு சமூகமளித்திருக்கும் இரு சாராரின் வாக்குகள் சமநிலையில் இருக்கும் பொழுது மாநகர முதல்வருக்கு அல்லது பிரதி மாநகர முதல்வருக்கு அல்லது தலைமை வகிக்கும் தலைவருக்கு அவரது வாக்கைத் தவிர்த்து மேலும் ஒரு வாக்குரிமையுண்டு. இத்தன்மை மாநகர சபைக்கு உள்ளது போன்று நகர சபைக்கும், பிரதேச சபைக்கும் உள்ளது. பொதுவாக , சபைச் செயற்பாடுகள் பின்வருமாறு இடம்பெறும்.

1. கடந்த பொதுக்கூட்டத்தின் நிகழ்வுகளை விடயங்களை உறுதிப்படுத்தல்.
2. சபைக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜர்கள் , விஞ்ஞாபனங்கள், முறைப்பாடுகள் என்பன தொடர்பாக செய்துள்ள விடயங்கள்
3. வினாக்கள், பிரேரணைகள்
4. சபைக்குழுக்கள் நிலைக்குழுக்களின் சிபாரிசுகளைக் கலந்துரையாடல்
5. சபைக்குத் தேவையான வரவு , செலவு தொடர்பான மாத அறிக்கைகள் , வேலைகள் சார்பான முன்னேற்றங்கள்

உள்ளூராட்சி அரசாங்கத்தின் நோக்கங்கள்

1) உள்ளூராட்சி அரசாங்க அதிகாரப்பகுதியில் வசிக்கும் மக்களால் தம்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்ற, சம்மந்தப்பட்ட வேறு விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுதல். அதாவது , தீர்மானம் மேற்கொள்ளுதலை பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பங்கேற்புடன் செய்விப்பதே அடிப்படை நோக்கமாக அமைகின்றது.

2) மக்களின் விருப்பு, வெறுப்புக்களைப் போன்றே தீர்மானங்கள் மற்றும் முடிவுகளின் அடிப்படையில் ஆட்சி இடம்பெறுவதால் பணிகளில் உச்சமட்ட வினைத்திறனைப் பெற்றுக்கொள்வதென்பதும் உள்ளூராட்சி அரசாங்க ஆட்சியின் மற்றுமொரு நோக்கமாகும்.

3) அதைப் போன்றே மத்திய அரசாங்கத்திடமிருந்து அவ்வாறின்றேல் மேலிடங்களில் இருந்து வருகின்ற கொள்கைத் தீர்மானங்களை தமது பிரதேச சுற்றுச்சூழலுக்கு பொருந்தக்கூடியதாக அமைத்துக் கொள்ளுதலும் ஒரு நோக்கமாக அமைகின்றது.

4) மத்திய அரசாங்கத்தினால் அவ்வாறின்றேல் நாட்டின் பிரதான அரசியல் நிறுவனத்தினால் புரியப்படுகின்ற ஆட்சியில் இருந்து ஓரளவுக்கேனும் சுயாதீனத்தைப் பேணிவருதல் உள்ளூராட்சி அரசாங்கங்களுடன் தொடர்புடைய மற்றுமொரு நோக்கமாக எடுத்துக்காட்டலாம்.

5) பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் நிருவாக செயற்பாடுகளுக்கிடையில் இணைப்பாக்கத்தைப் பேணிவருதல் அதாவது , இத்தகைய அபிவிருத்தி மற்றும் நிருவாக பணிகளை ஈடேற்றுகின்ற அனைத்து நிறுவனங்களுக்கும் இடையில் தொடர்பினை வளர்த்துக் கொள்வது மற்றுமொரு முக்கிய நோக்கமாகும்.

6) பிரதேச அபிவிருத்தி, நிருவாக மற்றும் சமூக கலாசாரப் பணிகளை கிரமமாகவும் , அமைதியாகவும் பேணிவரத் தேவையான மக்கள் பங்கேற்பினை பெற்றுக் கொள்வதும் உள்ளூராட்சி அரசாங்கத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

7) மக்களின் பணம் , இயற்கை வளங்கள் அதேபோன்றே பொதுச்சொத்துக்களில் இடம்பெறக்கூடிய ஊழல்கள், மோசடிகள் மற்றும் முறைகேடுகளை தடுப்பதும் உள்ளூராட்சி அரசாங்கத்தின் நல்லதொரு நோக்கமாகும்.

8) பிரதேசத்தில் சட்டத்தையும் , ஒழுங்கையும் பேணிவரத் தேவையான நல்லதொரு பிரஜைகள் சமூகத்தை உருவாக்குவது மற்றுமொரு நோக்கமாகும்.

9) உள்ளூராட்சி அரசியல் பிரதிநிதி ஒருவர் தான் என்றோ ஒருநாள் தேசிய அரசியல் தலைவராவார். அவ்வாறு அமைவதற்கு அவசியமான அடிப்படை அரசியல் பயிற்சியை பெற்றுக்கொள்ளும் நிறுவனமாக உள்ளூராட்சி அரசாங்கங்களின் செயற்பாட்டினை அமைத்துக் கொள்வது மற்றுமொரு நோக்கமாகும்.

10) தமது அதிகாரப் பிரதேசத்திற்கு மாத்திரம் தனித்துவமான விடயங்கள் இருக்கின்றன. அவை தொடர்பான தீர்மானங்களை அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே மேற்கொள்ள வேண்டும்.

11) உள்ளூராட்சி அரசாங்கம் என்பது அடிமட்டத்தில் உள்ள சனநாயக அரசியல் நிறுவனமாகும். அதாவது ஒரு நாட்டு மக்களால் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்ற மிகச்சிறிய அரசாங்கமே உள்ளூராட்சி அரசாங்கமாகும். அதனூடாக சனநாயகத்தை (மக்களால் மக்களுக்காக புரியப்படுகின்ற அவர்களின் ஆட்சி) செயற்படுத்துவது மற்றுமொரு நோக்கமாகும்.

12) நாட்டில் பல்வேறு வேறுபாடுகள் நிலவும். இவ் அமைவுக்கிணங்க இடம்பெறும் வேறுபாடு இன , மத, குழுக்களுக்கிடையில் தோன்றுகின்ற வேறுபாடுகள். இத்தகைய வேறுபாடுகள் காரணமாக முரண்பாடுகள் உருவாகக்கூடும். அவ்வாறு இல்லாமல் அவ்வேறுபாடுகள் நிலவுகின்ற அதேவேளையில் ஒத்துழைப்புடன் செயலாற்றுவது உள்ளூராட்சி அரசாங்கங்கங்களின் மற்றுமொரு நோக்கமாகும்.

13) ஒரு நாட்டின் மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகளுடன் மக்களால் நேரடியாக தொடர்பு கொள்ள முடியாது. எனினும் உள்ளூராட்சி அரசாங்கங்கங்களின் செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்பினை உருவாக்கிக் கொடுப்பது உள்ளூராட்சி அரசாங்கத்தின் மற்றுமொரு முக்கிய நோக்கமாகும்.

14) அரசாங்கம் என்பது மக்களின் கூட்டமைப்பே. மக்களின் கூட்டமைப்பு நல்லதாக இருந்தாலேயே அரசாங்கம் நல்லதாக அமையும். எனவே நல்ல மக்களை - பிரஜைகளை உருவாக்க உதவுவது உள்ளூராட்சி அரசாங்கங்களின் மற்றுமொரு நோக்கமாகும்.

15) இப்போது முன்னரைப் போல் அல்ல. அரசுகள் மிகவும் விசாலமானவை. எனவே இந்த விசாலமான நாடுகளில் ஆட்சி , நிருவாக அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்ளும் போது உள்ளூராட்சி அரசாங்கங்கள் மிகவும் அவசியமான நிறுவனங்களாகும். எனவே மத்திய அல்லது பிரதான பணிகளுக்கு உதவுவது உள்ளூராட்சி அரசாங்கங்களின் மற்றுமொரு நோக்கமாக அமைகின்றது.

16) உள்ளூராட்சி அரசாங்கத்தின் அதிகாரப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் அதற்குள் மேலும் பல்வேறு அரச மற்றும் அரச துறையல்லா நிறுவனங்கள் காணப்படுகின்றன. அந்த நிறுவனங்களிடையே இணைப்பாக்கம் செய்து பொது அபிவிருத்திப் பணிகளை பேணிவர வேண்டியது உள்ளூராட்சி அரசாங்கமொன்றின் மிகச் சிறந்த நோக்கமும் பொறுப்புமாக அமைகின்றது.

17) அத்தகைய இணைப்பாக்கத்தை பேணிவந்து பிரதேச நிறுவனங்களுக்கிடையில் தோன்றக்கூடிய முரண்பாடுகளை தீர்த்துவைத்து செயலாற்றுவதும் உள்ளூராட்சி அரசாங்கத்தின் நோக்கமாகும்.

18) மேற் சொல்லப்பட்ட பலவிதமான நோக்கங்களை கருத்திற்கொண்டு பிரதேசத்திற்கு ஏற்புடைய அவசியமான அபிவிருத்தி மற்றும் நிருவாக வேலைத்திட்டங்களை திட்டமிட்டுக் கொள்வதும் உள்ளூராட்சி அரசாங்கங்களின் மிக முக்கிய நோக்கமாகும்.

உள்ளூராட்சி நிர்வாக முறைமையில் மாநகர சபை , நகர சபை , பிரதேச சபை போன்ற நிறுவனங்கள் தொழிற்படுகின்றன. அவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராயப்படுகின்றது.

மாநகர சபை

இலங்கையில் உள்ளூராட்சி அமைப்பில் மாநகர சபையே முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. மாநகர சபையின் இலக்கு அதன் அதிகாரப்பரப்புக்கு உட்பட்ட மக்களுக்கு ஒன்றிணைந்த சேவைகளை அளிப்பதாகும். இச்சேவைகள் பொதுமக்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்ததொன்றாகும். இந்த இலக்கை அடைவதற்காக மாநகர சபை ஏழு பிரிவுகளாக பிரிந்து இயங்க வேண்டும். அவையாவன்

1. பாதை, கட்டிடம், தாவர அமைப்புத்திட்டங்கள்
2. பொதுவான நிர்வாக சேவைத் திட்டங்கள்
3. பொதுச் சுகாதாரம்
4. நீர் வசதிகள்
5. பயன்தரு சேவைகள்
6. மின்சக்தி
7. சேமநலச் சேவைகள் மற்றும் வசதிகள் என்பனவாகும்.

மாநகர சபையின் அதிகாரங்கள்

1. அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபைக்கு உரித்தாக்கப்பட்ட அரச காணிகளை , கட்டடங்களை ஏலத்தில் விற்கவோ அல்லது வாடகைக்கு விடவோ அதிகாரமுண்டு.
2. பதவிகளை உருவாக்கவும் அப்பதவிகளுக்கு தகுதியானவர்களை நியமிக்கவும் முடியும்
3. ஒப்பந்தங்களைச் செய்தல்
4. வரவு, செலவுத் திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துதல்
5. பொது நோக்கத்தின் அடிப்படையில் தனியார் காணிகள் , கட்டடங்கள் என்பவற்றின் அளவு எடுத்தல்
6. விகிதங்கள், வரிகள் முறியின் மீது கடன் பெறல்
7. புதிய பாதைகள் அமைப்பதற்கு, பழைய வீதிகளை திருத்துவதற்கும், பாதைகளிலுள்ள தடைகளை அகற்றுவதற்கும் , பாதைகள் சேதமிழைக்கப்பட்டால் நீதிமன்றத்தரில் வழக்குத் தொடரவும், மின் வெளிச்சம் வழங்கவும் அதிகாரமுண்டு
8. இறைச்சிக் கடைக்காரர்களுக்கும் , பொது கொள்கலன்களுக்கும் அனுமதிச்சீட்டு வழங்குதல், நீர் விநியோகம், சந்தை போன்றவற்றை உருவாக்கி பராமரித்தல்

மாநகர சபையின் பிரதம அதிகாரியான மாநகர ஆணையாளரின் அதிகாரங்களும் பணிகளும்

- மாநகர சபையின் புத்தகங்கள் , உறுதிகள், ஒப்பந்தங்கள், கணக்குகள், உறுதிச்சீட்டு, பதிவுகள் தொர்பில் பொறுப்புக்கூறல்.
- சபையின் பொது முத்திரையினை தன் பொறுப்பில் வைத்திருத்தல்.
- மாநகர முதல்வர் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு எழுத்து மூலம் அறிவித்தல்.
- அனுமதிப்பத்திரமின்றி நடாத்தப்படும் கைத்தொழிலொன்றை , வியாபாரமொன்றை மூடிவிடுமாறு கட்டளை பிறப்பிக்குமாறு நீதவான் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தல்.
- வருடாந்த நிருவாக அறிக்கையை ஒழுங்குபடுத்தி , சபைக்கும் அமைச்சருக்கும் சமர்ப்பித்தல்.
- கணக்காய்வு மேலதிக கட்டணங்களை அறவிட்டுக்கொள்ளுதல் , ரூபா. 15000 ஐ தாண்டாத ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளல்.
- ஏதேனும் ஒப்பந்தத்தை கையொப்பமிடுவதற்கு முன்னர் போதியளவு பிணையைப் பெற்றுக் கொள்ளுதல்.

© 2024, IRJTSR

 கேள்வி கோருதலும் , வியாபாரப்படுத்துதலும், விற்பனைச் சான்றிதழில் கையொப்பமிடுதலும்.

 சோலை வரி அல்லது வரி செலுத்தாமை காரணமாக அசைவற்ற சொத்துக்களை தடை செய்து, விற்பனை செய்வதற்கு தகுந்த உத்தியோகத்தரொருவருக்கு அதிகாரமளித்தல்.

மாநகர சபையின் தொழிற்பாட்டுக்கு நிதி அவசியமாகும். அந்நிலையினை பின்வரும் நிதியூட்டு வழிமுறையினூடாக பெற்றுக் கொள்கின்றது.

1. சபைக் காணிகளையும் , கட்டடங்களையும் பயன்படுத்தியமைக்கு வாடகை அறவிடுதல், அவற்றை விற்றல் மூலம் கிடைக்கும் பணம்.
2. சபையினால் வழங்கப்படும் அனுமதிச்சீட்டுக்கள் மீது வரியைப் பெறுதல்.
3. அப்பிரதேசத்திலுள்ள அசைய முடியாத சொத்துக்கள் மீது ஆண்டுப் பெறுமதி மீது வரி
4. வழங்கப்படும் சேவைகள் பொருட்டுக் கட்டணங்கள் அறவிடுவதன் மூலம் கிடைக்கும் பணம்.
5. தண்டப்பணம், குற்றப்பணம், முத்திரை வரி மூலம் கிடைக்கும் பணம்.
6. அமைச்சரின் விசேட ஒதுக்கு நன்கொடை மூலம் கிடைக்கும் பணம்.

இச்சபை இந்நிதியினை பொதுவாக சமூகநலச் செலவுகளுக்காக செலவிடுகின்றது. அதாவது, வீடமைப்புத் திட்டமிடல் , வடிகாலமைப்பு, பாடசாலை பராமரிப்பு, வெள்ளப்பெருக்கு போன்ற அனர்த்தங்கள், நூல் நிலையப் பராமரிப்பு, மின் வெளிச்சம் ஏற்படுத்தல், பஸ்தரிப்பு நிலையத் தாபரிப்பு, விழாவுக்கான செலவுகள் , சுகாதாரத்தை பேணல் , மலசலகூட வசதி , குளங்கள், கிணறுகள், பூந்தோட்டங்கள் அமைத்தல் போன்றவற்றுக்கு நிதியை செலவு செய்யலாம். மேலும் மாநகர முதல்வர் ஃ ஆணையாளர் மற்றைய நிர்வாகிகள் கடமையாற்றும் போது ஏற்படும் செலவுகள் என்பவற்றுக்காக நிதி செலவு செய்யப்படுகின்றது.

நகர சபை

வளர்ச்சியடைந்துவரும் ஒரு பிரதேசத்தை , நகரத் தன்மை கொண்ட இடத்தை நிர்வாக எல்லை குறிப்பிட்டு அமைச்சர் கட்டளையொன்றின் மூலம் நகர சபையை உருவாக்கலாம். மாநகர சபையின் செயற்பாடுகளை ஒத்ததாகவே நகர சபையின் செயற்பாடும் அமைந்திருக்கும். நகர சபை பின்வரும் முக்கிய அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

1. அமைச்சரின் அங்கீகாரத்துடன் நகர சபைக்கு உரித்தான காணிகளை , கட்டிடங்களை விற்கவோ, வாடகைக்கு கொடுக்கவோ முடியும்.
2. பதவிகளை உருவாக்கவும், அதை நிரப்புவதற்கும் அதிகாரமுண்டு.
3. ஒப்பந்தம் செய்வதற்கு அதிகாரமுண்டு.
4. சபையின் நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் வழக்காடவும் முடியும்.
5. அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு நிவாரணம் அளிக்க முடியும்.

நகர சபைச் செயலாளருக்கு உரித்தான அதிகாரங்களும் பணிகளும்

 நகர சபைத் தலைவரின் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் அது குறித்து மாவட்டத்தின் தேர்தல் அலுவலருக்கு எழுத்து மூலம் அறிவித்தல்.

 நகர சபையின் செயற்பாடுகள் , கூட்டறிக்கையின் பிரித்தெடுத்தல்கள் செயலாளரினால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவதன் மூலம் நீதிமன்ற சாட்சியாக நிற்றல்.

 வரி செலுத்தாமை தொடர்பாக அறியப்படுத்தி ஏழு நாட்கள் கடந்ததன் பின்னர் கொடுப்பனவுகளை செய்யாமை , தொடர்பாக நீதவான் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

© 2024, IRJTSR

 நகர சபைக்கு அறவிடப்பட வேண்டிய செலுத்தல்களை அறவிட்டுக் கொள்வதற்கான பொறுப்பு.

 நகர சபைத் தலைவர் , துணைத் தலைவர் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்குரிய பொறுப்புக்களை நிறைவேற்றல்.

 கட்டளையிடப்பட்டுள்ளவாறு அனைத்து அறிவித்தல்களையும் , பொறுப்புக்களையும் பொறுப்பேற்றல்.

சபை விதிக்கும் வரிகள் மூலமாகவும் , கொடைகள் மூலமாகவும் (இவைகள் மொத்தக் கொடையாகவோ, வாழ்க்கைச் செலவுக் கொடையாகவோ அமையலாம்) கடன்கள் மூலமாகவும், விற்றல், வாடகைக்குக் கொடுத்தல் மூலமாகவும் அமைச்சரின் விசேட கொடுப்பனவுகள் மூலமாகவும் நகர சபை நிதியைப் பெற்றுக்கொள்கின்றது

பிரதேச சபை

உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரால் வெளியிடப்படும் கட்டளை மூலம் ஏதேனும் இடப்பரப்பினை பிரதேச சபை எனப் பிரகடனப்படுத்தலாம். இவ்வாறு பிரகடனப்படுத்தப்படும் பிரதேச சபையின் நிர்வாக எல்லையாக பிரதேச செயலாளர் பிரிவுகளே பெரும்பாலும் அமையும். மாநகர சபை , நகர சபை எல்லைகள் தவிர்ந்த ஏனைய நிலப்பரப்பு பிரதேச சபைகளின் நிர்வாகத்திற்கு உட்படுகின்றது.

பிரதேச சபைகள் உறுப்பினர்களின் எண்ணிக்கை உள்ளூராட்சி அமைச்சினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் விசேட கட்டளை ஒன்றினால் தீர்மானிக்கப்படும். தவிசாளர் வருகை தராதபோது துணைத்தவிசாளர் கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல் வேண்டும். மேற்படி இருவரும் வருகை தராதபோது சமூகமளித்துள்ள உறுப்பினர்கள் அவர்களுள் ஒருவரை தலைமை தாங்குவதற்கென தெரிவு செய்து கூட்டத்தை நடத்தலாம்.பிரதேச சபையின் பிரதம நிர்வாகி தவிசாளரே ஆவார். சபையின் செயற்பாடுகளை திறமையும் பயனுறுதியும் வாய்ந்தவையாக விளங்கச் செய்வதில் தவிசாளர் பிரதான பங்கு வகிக்கின்றார்.

தீர்மானம் எடுக்கும் உறுப்பு என்ற வகையில் தவிசாளர். வழங்கும் தலைமைத்துவம் வழிகாட்டுதல் மீதே பெருமளவு சார்ந்திருக்கின்றது. சபையின் செயற்பாடுகளை நிறைவேற்றுபவராக செயலாளரே விளங்குகின்றார். தவிசாளருக்கும் , சபை உறுப்பினர்களுக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலமாக செயலாளர் காணப்படுகின்றார்.

பிரதேச சபைச் செயலாளருக்கு உரித்தான அதிகாரங்களும், பணிகளும்

 பொது இலட்சினைக்குப் பொறுப்பாயிருத்தல், ஒப்பந்தங்கள் சம்மந்தமாக தலைவரும் சேர்ந்து கையொப்பமிடவும் அவற்றில் பொது இலட்சினையினை இடுதலும்.

 எழுத்து மூல அறிவித்தல் மூலம் தமது அதிகாங்களையும் பொறுப்புக்களையும் வேறொருவருக்கு ஒப்படைத்தல்.

 சபையின் பிரதம நிருவாக அதிகாரியாகச் செயற்படுதல்.

 சபை கலைக்கப்பட்டதன் பின்னர் சபையின் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.

 வரி செலுத்துவதில், அனுமதிப்பத்திர கட்டணங்களை செலுத்துவதில் அலட்சியமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் நீதவான் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

 சபையினால் வாடகைக்கு விடப்பட்டுள்ள இடங்களிலிருந்து கொடுப்பனவுகளை அறவிட்டுக்கொள்ளுதல்.

 சொத்துத் தடைவிதித்தலின் போது அவற்றை மீட்டுக்கொள்வதற்கான பத்திரிகை அறிவித்தலை வெளியிடுதல்.

 தடை செய்யப்பட்ட ஏதும் அசையும் சொத்துக்களை 60 நாட்களுக்குள் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்தல்.

 பல்வேறு அறிவித்தல்களை பொறுப்பளித்தலும் பொறுப்பேற்றலும்

© 2024, IRJTSR

பிரதேச சபைக்கு ஆலோசனை வழங்குவதற்கென தனியான குழுக்களும் நியமிக்கப்படும். அவையாவன,

அ) நிதி மற்றும் கொள்கை உருவாக்கம்

ஆ) வீடமைப்பு சமூக அபிவிருத்தி

இ) தொழில்நுட்ப சேவைகள்

ஈ) சுற்றாடலும் வாழ் வசதிகளும்

பிரதேச சபையானது பொதுமக்கள், சுகாதாரம், பொதுப்பயன்பாட்டு சேவைகள், பகிரங்க பொது வழிகள் தொடர்பான கருமங்களையும் ஒழுங்குபடுத்தல் , கட்டுப்படுத்தல், மக்களின் சௌகரியம் சேமநலனையும் வாழ் வசதிகளையும் பாதுகாத்தல் , மேம்படுத்தல் போன்ற பல அதிகாரங்களை கொண்டுள்ளது.

சபைகளின் மீதான நிதிக் கட்டுப்பாடும் பலம் வாய்ந்ததாக உள்ளது. இச்சபைகளின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினை உள்ளூராட்சி அமைச்சர் தள்ளிவைப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். கணக்காளர் நாயகத்தினூடாக கணக்காய்வு செய்யலாம். அறிக்கைகளையும், புள்ளி விபரங்களையும் கோரிப் பெறலாம். விசாரணைகள் மேற்கொள்ளலாம். குறித்த வேலையை குறித்த காலப்பகுதியில் செய்யப் பணிக்கலாம். மேலும் ஒரு சபையின் எல்லைகளையும் உறுப்பினர்களின் அளவையும் உள்ளூராட்சி அமைச்சர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் மாற்றியமைக்கலாம். குறித்த செயற்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கென ஆள் எவரையும் அமைச்சர் நியமிக்கலாம். நிர்வாக ஊழல் , திறமையின்மை, அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணங்களுக்காக அமைச்சரின் கட்டளை மூலம் மாநகர சபை முதல்வர் அல்லது தலைவர், பிரதி மாநகர சபை முதல்வர் அல்லது எந்த உறுப்பினரும் அகற்றப்படலாம். அல்லது சபை கலைக்கப்படலாம். ஆனால் , இதை ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவர் விசாரணை செய்ய வேண்டும். விசாரணையை எதிர்பார்த்து மேற்படி உறுப்பினர்களை இடைநிறுத்தம் செய்யலாம். உறுப்பினர்களை நீக்கும் கட்டளைகளையும் , சபைகளை கலைத்தல் கட்டளைகளையும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

சபைகளின் சட்ட முரணான கொடுப்பனவுகள் , கடமை முறிப்பால் ஏற்படும் இழப்புக்கள் , நிதியை தவறாகப் பேணுதல் ஆகிய காரணங்களினால் சபையின் உறுப்பினர்கள், ஊழியர்கள் எவரும் நீதவான் நீதிமன்றத்தில் நிறுத்தப்படலாம். அரச கடமைகளுக்கு தீங்கு விளைவிப்பதற்கு எதிரான கட்டளைச்சட்டம் மூலம் உறுப்பினர்களும் , ஊழியர்களும் குற்றவியல் சட்டத்திற்கு உட்படுத்தப்படலாம். எனவே மத்தியரசினதும் , நியதிச் சட்டங்களதும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டே உள்ளூராட்சி சபைகள் செயற்பட முடியும். யு.கே.கிக்ஸ் என்பவர் இது பற்றி கூறும்போது 'இக்கட்டுப்பாடுகள் உள்ளூராட்சி நிறுவனங்களின் சுயமான செயற்பாட்டை தகர்க்கின்றன. ஆயினும் கட்டுப்பாடுகள் இல்லாதவிடத்து சபைகள் திசை மாறலாம். எனவே அவசியமான நேரத்தில் முறைமையான தலையீட்டை மட்டுமே மத்தியரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் ' என்கிறார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாக முறைமையில் உள்ளூராட்சி சேவைகள் ஆணையகம் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதொரு நிகழ்வாகும். இவ்வாணையத்திற்கு முன்பு உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆளணியின் நியமனம் , பதவி உயர்வு, பதவி நீக்கம், உழைப்பூதியம் என்பன சபைகளால் தீர்மானிக்கப்பட்டன. இந்நிலைமையால் பதவிகளின் தகைமை, சபையின் விருப்பு , வெறுப்புக்கு உட்பட்டு சேவையாற்ற வேண்டியும் இருந்தது. மேலும் உயர் தகைமைகளைக் கொண்டவர்கள் உள்ளூராட்சி நிறுவனங்களில் தமது சேவைகளை அளிக்கத் தயங்கியதால் அவர்களின் ஆற்றலையும் பெற முடியவில்லை. உள்ளூராட்சி ஆணையாளர் உட்பட அமைச்சரால் நியமிக்கப்படும் நால்வர் கொண்ட

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2024, IRJTSR

இச்சபை மூன்று ஆண்டு ஆயுளைக் கொண்டது. ஆளணி நியமனம் , பதவி உயர்வு , இடமாற்றம், உழைப்பூதியம், ஒழுக்காற்று நடவடிக்கை ஆகியவற்றுக்கு இவ்வாணையம் பொறுப்பாக்கப்பட்டிருப்பதால் உள்ளூராட்சி முறைமையில் அலுவலர் குழாம் பாதுகாக்கப்படுவதோடு அவற்றின் நிலையும் உயர்த்தப்பட்டது. இதன் மூலம் உள்ளூராட்சியின் திறமையான நிர்வாகத்துக்கு வழி செய்யப்பட்டுள்ளது எனலாம்.

உள்ளூராட்சி சபைகள் எதிர்நோக்கும் பிரதான சவால்கள்

உள்ளூராட்சி நிறுவனங்கள் எதிர்நோக்கும் பிரதான சவால்களை நிறுவனம் சார் சவால்கள் , நிறுவனம் சாரா சவால்கள் என இரண்டு பிரிவுகளாக நோக்கலாம்.

- **நிறுவனம் சார் சவால்கள்**
- மக்கள் பங்கேற்பின்மை குறைவு : - இலங்கையில் உள்ளூராட்சி சபைகளின் மக்களின் பங்கேற்பினைத் தூண்டுவதற்கான செயற்பாடுகளும் கிடைக்கப்பெறும் பொறிமுறைகளும் போதுமானதாக காணப்படவில்லை.
- பொறுப்புடமையின்மை :- நிருவாகப் பொறுப்புடைமையினை நிறைவேற்றுகின்ற பொறிமுறை உள்ளூராட்சி மன்றங்களில் நன்கு விருத்தியடையவில்லை. மக்கள் பங்குபற்றுதலுக்கான வாய்ப்பு குறைந்த மட்டத்தில் நிலவுவதனால் மக்களுக்கு பொறுப்புச் சொல்வதிலிருந்து பிரதிநிதிகளும், அதிகாரிகளும் விலகிச் செயற்பட முடிகின்றது. இந்நிலை உள்ளூராட்சி மன்றங்களின் செயற்றிறன் குன்றுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. அதாவது மக்களுக்கன்றி மத்தியரசாங்கத்திற்கு மட்டும் பொறுப்புச் சொல்லும் நபராக மாற்றப்பட்டுள்ளனர்.
- திறன்சார் பிரச்சினை :- உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளுள் அவதானிக்கத்தக்க மற்றுமொரு பிரச்சினை அவற்றின் திறன் சார்ந்ததாகும். அவை பௌதீக வள ரீதியான திறன் , மனிதவள ரீதியான திறன் என இரு வகையில் நோக்கக்கூடியதாக இருக்கும்.
- நிதிப்பற்றாக்குறை - இச்சபைகளின் நிதி மூலங்கள் குறைவாக இருப்பதும் மத்தியரசின் நன்கொடைகளிலும் கடன்களிலும் தங்கியிருப்பது இந்நிறுவனங்களை பலவீனப்படுத்துகின்றன.
- இன முரண்பாடு - இலங்கையில் காணப்படும் இன முரண்பாடு குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சபைகளின் செயற்பாட்டில் உறுதியற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது எனலாம். அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகள் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் மத்தியரசாங்கத்தால் நடத்தப்படுகின்றன.
- அரசியல் குரோதம் , சுயநலநோக்கம் என்பன உள்ளூராட்சி சபைகளின் சிறந்த செயற்பாட்டிற்கு தடைக்கல்லாக அமைகின்றன.
- மத்தியரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் - உள்ளூராட்சி சபைகளின் செயற்பாட்டிற்கு மத்தியரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் மிகவும் தடையாக உள்ளது. அதாவது மத்தியரசாங்கத்தில் தங்கியிருக்கும் அமைப்புக்களாகியுள்ளன. இந்நிறுவனங்களை முழுமையாகக் கலைத்து விடவும் பின்னர் அதன் நிருவாகத்தினை மத்தியரசாங்கம் கொண்டு செயற்படுத்துவதற்கும் பெற்றுள்ள அதிகாரம் உள்ளூராட்சி சபைகளை தனித்துவமற்ற அமைப்புக்களாக்கி விடுகின்றது. சுருங்கச் சொல்லின் உள்ளூராட்சி சபைகளின் வாழ்வும், அழிவும் மத்தியரசாங்கத்தின் கரங்களில் தங்கியுள்ளது எனலாம்.
- குறித்த காலத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறாமை : 2018 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக வெற்றி பெற்ற சபைகளின் ஆயுட்காலம் 2022 பெப்ரவரியுடன் நிறைவு பெற்றன. ஆயினும் நாட்டின் பொருளாதார நெருக்கடி , அரசியல் நெருக்கடிகள் காரணமாக மேலும் ஓர் ஆண்டு காலம்

© 2024, IRJTSR

நீடிக்கப்பட்டிருந்தது. இது மக்கள் ஆணையை மீறிய செயலாகவும் மத்தியரசாங்கத்தின் வரம்பற்ற அதிகாரத்தையும் வெளிக்காட்டுவதாகவும் அமைந்துள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி மார்ச் 9 என அறிவிக்கப்பட்டு வேட்புமனு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் தேர்தலை ஒத்திவைப்பது ஜனநாயக பங்குபற்றலுக்கு ஏற்பட்ட பேராபத்தாகவே நோக்க வேண்டியுள்ளது. உண்மையில் ஆட்சியாளர்களின் தேவைக்கு ஏற்ப நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை தீர்மானிக்க முடியாது. அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும். நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை உயர்நீதிமன்றம் முழுமையாகப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்படுகின்றது. அதேநேரம் தேர்தல் நடவடிக்கைகளுக்கு சகல அரச நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ள நிலையில் அரச நிறுவனங்கள் ஊடாக திட்டமிட்டு நெருக்கடிகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆகவே , ஆட்சித்தலைவர்கள் தங்கள் அரசியல் இருப்பையும் எதிர்கால அரசியல் அபிலாசைகளை கருத்தில் கொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய காலத்தில் நடைபெறாமல் காலம் தாழ்த்துவது மக்களின் பங்குபற்றல் ஜனநாயக அடிப்படை உரிமையை மீறிய செயலாகவே நோக்க வேண்டியுள்ளது.

- **நிறுவனம் சாரா சவால்கள்**
- சிக்கலான சமூக அமைப்பு :- இலங்கையின் சமூக அமைப்பு இன , மத, மொழி, சாதி அடிப்படையில் சமூகக் குழுக்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இத்தகைய பல்வகைமையினைக் கொண்ட சமூக அடிப்படையினை நிருவகிக்கத்தக்க பன்மை அடிப்படையிலான நிருவாக மாதிரியினை உள்ளூராட்சி நிறுவனங்கள் கொண்டிருப்பதில்லை. சபைகளின் தீர்மானம் எடுத்தல் , அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பவற்றின் போது எதிர்கொள்கின்ற முக்கிய நெருக்கடி சமூகப் பல்வகைமையினை எப்படி பிரதிபலிப்பது என்பதேயாகும். சபைகளினால் எடுக்கப்படுகின்ற ஒரு தீர்மானம் அல்லது நடைமுறைப்படுத்துகின்ற ஒரு அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒரு சமூகத்தினை நோக்கியதாக அமைகின்ற போது ஏனைய சமூகங்கள் அவ்விடயத்தில் அதிருப்தியுறுகின்றன. பிரதிநிதிகளும் சமூக ரீதியான அரசியல் பின்னணியைக் கொண்டிருப்பதனால் குறித்த சமூகங்களை இலக்கு வைத்து தனது அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனை அவதானிக்கலாம்.
- மக்களின் உளப்பாங்கு : - ஜனநாயகத்தின் வெற்றிக்கு நேர் நிலையான உளப்பாங்கு இன்றியமையாததாகும். சபைகளின் செயற்றிறனின்மை அரசியல் , அரசியல் சகாய முறை , அரசியல் முறையில் உள்ள பலவீனம் என்பன மக்களின் எதிர்மறையான உளப்பாங்கினை வடிவமைப்பதில் பங்காற்றுகின்றன எனலாம்.
- முதிர்ச்சியற்ற அரசியல் கலாசாரம் :- உள்ளூராட்சி நிறுவனங்களில் நிலவும் அரசியல் கலாசாரத்தினை அவதானிக்கின்ற போது அதன் முதிர்ச்சியற்ற தன்மையினை அடையாளம் காணலாம். பிரதிநிதிகளும் , ஊழியர்களும் தனது பொறுப்புக்களை உணர்ந்து கொள்வதற்குப் பதிலாக எதிர்ப்பு அரசியலை நடைமுறைப்படுத்தி வருகின்ற போக்கினை அவதானிக்கலாம். சபைகளின் ஆளும் - எதிர்க்கட்சி அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான இரு பகுதியினராக உள்ளனர். இது மக்கள் மத்தியில் பாதிப்பினைச் செலுத்துகின்றது.
- வாக்காளர் பிரதிநிதிகள் தொடர்பு :- தேர்தலுக்குப் பின்னர் பெரும்பாலான பிரதிநிதிகள் மக்களுடன் நெருக்கமான தொடர்பினைப் பேணுவது குறைவாகவே காணப்படுகின்றது. தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர் தமக்கு அதிகாரத்தினை வழங்கிய பிரஜைகளின் நல்வாழ்வில் அன்றி பிரதிநிதிகள் தமது நலன்களின் மீதே அதிக சிரத்தை கொள்கின்றனர்.

© 2024, IRJTSR

- சிவில் சமூக செயற்பாடு :- வெற்றிகரமான ஜனநாயகத்தின் இருப்பிற்கு சுதந்திரமானதும் பலம் வாய்ந்ததுமான சிவில் சமூக செயற்பாடு இன்றியமையாததாகும். பலம் வாய்ந்த சிவில் சமூகம் ஜனநாயகத்தின் காவலனாக செயற்படுவதுடன் மக்களை சமூகமயப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகின்றன. உள்ளூராட்சி நிறுவனங்களில் ஜனநாயகத்தை சீரமைப்பதற்கு சிவில் சமூகத்தின் இருப்பினைக் கண்டு கொள்வது சற்று கடினமானதாக காணப்படுகின்றது.

முடிவுரை

இலங்கையில் உள்ளூராட்சி அரசாங்க முறை மிக நீண்ட வரலாற்றினைக் கொண்ட அரசாங்க நிறுவனங்கள் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட உப ஆட்சித் தாபனமாகும். உள்ளூராட்சி மட்டத்தில் நிருவாக மாற்றம் , பிரதேச அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் நடைமுறையில் பயனுறும் வகையில் மக்கள் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக்களை வழங்குதல் என்ற இலக்கினை அடைவதற்காகவே உள்ளூராட்சி அரசாங்க சபைகள் உருவாக்கப்பட்டன. ஆயினும் உள்ளூராட்சி நிறுவனங்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான விவாதங்களும் கலந்துரையாடல்களும் நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் பல்வேறு ஆணைக்குழுக்களையும் அரசாங்கம் நியமித்தது. இதன்படி எல்லை நிர்ணயம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பரந்தளவு சுயாட்சியினை வழங்குவதற்கான ஏற்பாடுகள் , உள்ளூராட்சி சபைகளின் பிரதேச அபிவிருத்தி வகிபாகத்தினை பலப்படுத்துதல் , திறமையானதும் செயற்றிறனானதும் பொறுப்புடைமையுள்ளதும் வெளிப்படைத்தன்மையுள்ளதுமான நிதிவள முகாமைத்துவம் , மனிதவள முகாமைத்துவத்திற்கான புதிய முறைமை போன்ற பல முக்கியமான பரந்துரைகளை இவ்வாணைக்குழுக்கள் முன்வைத்தன. உள்ளூராட்சி சபைகளில் காணப்படும் காலம் கடந்த சட்ட ஒழுக்க விதிகளில் மாற்றத்தை ஏற்படுத்துதல் உள்ளூராட்சியின் போது நிலவும் அரசியல் துருவமயமாதலை தவிர்த்தல் , வினைத்திறன், பயனுறுதி, வெளிப்படைத்தன்மை மேம்படுத்தல் , நிறுவனங்கள், திணைக்களங்கள், அமைச்சுக்களுக்கிடையேயான முரண்பாடுகளை நீக்குதல் , மத்தியமயமாக்கல் செயற்பாடுகளை தவிர்த்தல் , புதிய தேர்தல் முறைமையை மறுசீரமைப்புச் செய்தல் , உரிய காலத்தில் உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை நடத்தி மக்களின் பங்கேற்பு ஜனநாயகத்தினை உறுதிப்படுத்துதல் , இலத்திரனியல் அரசாங்க முறையை உள்ளூராட்சி சபைகளில் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றின் மூலம் சிறந்ததொரு உள்ளூராட்சி அரசாங்க முறையை உருவாக்க முடியும் எனலாம். அந்தவகையில் மேலே குறிப்பிட்ட சிக்கல்களை நிவர்த்த்p செய்வதன் மூலமாகவும் உள்ளூராட்சி சபைகளுக்கு மத்தியரசாங்கம் ஆலோசனை வழங்கி மேற்பார்வை செய்து ஒன்றோடொன்று சுமுகமான அணுகுமுறைகளை பின்பற்றி செயற்படுவதன் வாயிலாகவும் உள்ளூராட்சி சபைகளும் மத்தியரசாங்கமும் கூடிய பொறுப்புணர்வோடு கடமை புரிவதாலும் 21ம் நூற்றாண்டுக்கு ஏற்ப சிறந்ததொரு உள்ளூராட்சி நிர்வாகத்தை ஏற்படுத்துவதுடன் உள்ளூராட்சி சபைகள் அமைக்கப்பட்டதன் இலக்கு அர்த்தபுஸ்தியுள்ளதாக மாறும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை எனலாம்.

உசாத்துணை நூல்கள்

[1] Allean. H.J.B, (1990), Cultivating the grass roots: Why local goverment matters, The Hague: International Union of Local Authorities.

[2] Clarke. M, & Stewart. J, (1991), The Choices for local government for the 1990s and beyond. Harlow: Longman.

[3] Fowsar. M.A.M, (2020), State and Local Government in Sri Lanka, SEUSL.

[4] Gomme, G.L, (1987), Lectures on the principles of the local government. UK:A. Constable and Co.

[5] G.R.Tressie Leitar, (1978), Local Government and Decentralized Administration in Sri Lanka, Lake House Investment LTD, Colombo.

[6] Heymans. C, & Totemeyer. G, (1988), Government by the people : the politics of local government in South Africa, Cape Town: Juta & Co Ltd.

[7] Hicks. U.K, (1957) - Local Government and Finance in Ceylon Planning Secretarial Colombo.

[8] Manor. J, (1997) The Political Economy of democratic decentralization, Washington : World Bank.

[9] Mawhood. P, (1983), Local government in the third world, New York : Wiley and Sons.

[10] Nanaya Kara. V.K, (1989), Local government In : Navaratna. V.T, Public Administration in Sri Lanka, A Symposium, Sri Lanka Institute of Development Administration.

[11] Wiswa Warnapala. W.A, (1993), Local Politics in Sri Lanka, An Analysis of the Local Government Election of May 1991. South Asian Publisher LTD, New Delhi.

[12] Sunday Observer, (2018 January 07), Testina New Hybrid Election System.

[13] தம்ம திசாநாயக்கா, (2007), பிரதேச அரசாங்க ஆட்சி CPA, கொழும்பு.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2024, IRJTSR